இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 42 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 05 – ஞாயிற்றுக்கிழமை 21 செப்டம்பர் 2025 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 42 : Thiruvalluvar Year - 2056 - Purataasi 05 - Sunday 21 September 2025 - Madurai 12 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.09.2025) பள்ளிக்கல்வித் துறை சார்பில் சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், 26 மாவட்டங்களில் 94 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர் வசதிகள் மற்றும் சுற்றுச்சுவர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலையில் கட்டப்பட்டுள்ள கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப்பள்ளிக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, 21 மாவட்டங்களில், 243 பள்ளிகளில் 277 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர் வசதிகள், சுற்றுச்சுவர், பாரத சாரண சாரணியர் புதிய தலைமை அலுவலகக் கட்டடம் உள்ளிட்ட கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், எஸ்.எம்.நாசர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சி.வி.கணேசன், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மருத்துவர் பி.சந்திரமோகன், ஆசிரியர் தேர்வு வாரியத் தலைவர் திருமதி ச.ஜெயந்தி, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் மருத்துவர் மா.ஆர்த்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.09.2025) பள்ளிக்கல்வித் துறை சார்பில் சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழ்ப் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்ற 142 மாணவ, மாணவியர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கி வாழ்த்தினார்.

## தமிழ்நாட்டில் நம்முடைய ‘திராவிட மாடல்’ ஆட்சி அமைந்த பிறகு

# கல்விச் சூழலில் பெரும் மாற்றம் கண்டுள்ளோம்!

## பள்ளிக் கல்வித் துறை விழாவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, செப். 21 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.9.2025) சென்னை, நேரு உள் விளையாட்டரங்கில், பள்ளிக் கல்வித் துறை யின் சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழா வில், முடிவுற்ற பள்ளிக் கட்டடங்களை திறந்து வைத்து, புதிய பள்ளிக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, புதிய ஆசிரியர்களுக்கான நுழைவு நிலைப் பயிற்சியினை தொடங்கி வைத்து உரையாற்றுகையில், தமிழ்நாட்டில் நம்முடைய ‘திராவிட மாடல்’ ஆட்சி அமைந்த பிறகு கல்விச் சூழலில் மிகப் பெரிய மாற்றங் கள் கண்டுள்ளோம்!” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

நாம் வாழும் சமூகத்தைக் கட்டமைக் கும் நம் குழந்தைகளின் எதிர் காலத்தை, அவர்கள் பயணிக்கும் திசையைத் தீர்மா னிக்கும் ஆசிரியர் பணிக்கு வந்திருக்கக் கூடிய இரண்டாயிரத்து 715 பேரையும், தமிழ்நாட்டின் முதலமைச்சராக தமிழ் நாட்டு பெற்றோர்களின் சார்பாக வாழ்த்தி, வருக! வருக! என வரவேற்கிறேன்!

### ஆசிரியர்களுக்குப் பாடம் எடுத்த அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி!

ஆசிரியப் பெருமக்களுக்கான நுழைவு நிலைப் பயிற்சி தொடக்க விழா - 277 கோடி



ரூபாய் மதிப்பீட்டில், 243 புதிய கட்டடங்கள் மற்றும் பாரத சாரண - சாரணியர் தலைமை அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா - 94 கோடி ரூபாயில், புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டிருக்கக்கூடிய 59 பள்ளிக் கட்டடங்கள் திறப்பு என்று ‘முப்பெரும் விழா’ என்று இந்த நிகழ்ச்சிக்குப் பெயர் சூட்டி ஐம்பெரும் விழாவை ஏற்பாடு செய்தி ருக்கின்ற பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கும், அவருக்குத் துணை நிற்கக்கூடிய துறையின் செயலாளர் சந்திர மோகன், உள்ளிட்ட அத்தனை அதிகாரி களுக்கும் என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

எப்போதும் மாணவர்களுக்குத்தான் ஆசிரியர்கள் பாடம் எடுப்பார்கள். ஆனால், வரவேற்புரை மூலமாக ஆசிரியருக்கே பாடம் எடுத்திருக்கிறார் நம்முடைய அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள். என்னைப் பொறுத்தவரை, முதலமைச்சர் என்பதால், சில ஆலோசனைகளை உங்களிடம் சொல்கிறேன்.

### நல்லொழுக்கம் மிக்க நாளைய சமுதாயத்தை உருவாக்கும் ஆசிரியர்கள்!

ஆசிரியர் என்பவர், பாடப்புத்தகத்தில் இருக்கின்ற பாடங்களை மட்டும் சொல்லிக் கொடுப்பவர் அல்ல; தன்னுடைய கல்வி யையும், அனுபவத்தையும் சேர்த்து மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து, எதிர்காலத்தில், நல்லொழுக்கம் மிக்க நாளைய சமுதாயத்தை உருவாக்குகிற வர்கள்!

## சமத்துவம், சமூகநீதியின் தேவையை மாணவர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்!

ஒவ்வொரு முறை நீங்கள் வகுப்பறைக் குள்ளே நுழையும்போதும், நினைவில் கொள்ள வேண்டியது - உங்கள் முன்னால் உட்கார்ந்திருப்பவர்கள், பாடம் கற்றுக் கொள்கின்ற மாணவர்கள் மட்டுமல்ல, எதிர்கால டாக்டர்கள், இன்ஜினியர்கள், சயிண்டிஸ்ட், நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகின்ற அரசியல் தலைவர் கள் என்று நீங்கள் உணரவேண்டும்.

### பெற்ற அனுபவத்தால் சமூகத்துக்கே ஒளியேற்றும் ஆசிரியர்கள்!

நாட்டின் எதிர்காலத் தூண்களுக்கு நாம் சொல்லிக் கொடுக்கப் போகிறோம் என்ற பொறுப்புணர்வுதான் உங்களிடம் மேலோங்கி இருக்கவேண்டும்! இத்தனை ஆண்டு காலமாக, நீங்கள் மாணவர்களாக இருந்து, கல்வியைக் கற்று, சமூகத்தை உள்வாங்கி பெற்றிருக்கக்கூடிய அனுப வத்தை அடுத்த தலைமுறை மாணவர் களுக்கு கடத்தி, இந்தச் சமூகத்துக்கே ஒளியேற்றி வைக்கப் போகிறீர்கள்!

இன்றைக்கு நாம் இருக்கின்ற காலக் கட்டத்தில், பாடம் எடுப்பது உங்களுக்கு எளிதாகிவிடும் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால், நீங்கள் படித்த காலத்தில், ஏன், நாங்கள் படித்த காலத்தில் எல்லாம் பரந்துபட்ட வாசிப்பிற்கான தேடலுக்கு மிக வும் மெனக்கெட வேண்டியதாக இருந்தது. ஆனால், இன்றைக்கு அப்படியல்ல! அறிவி யல், வரலாறு, கணிதம் தொடங்கி, எந்தப் பாடமாக இருந்தாலும், அதன் ஆழத்தை, ரொம்ப எளிதாக கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் உருவாகிவிட்டது! ஆனால், இதில் ஒரு விஷயத்தில் நாம் தெளிவாக இருக்க வேண்டும். இவைகள் அனைத்துமே தகவல்கள்தான்

### மாணவர்களின் அறிவை மேம்படுத்தும் ஆசிரியர்களின் பெரும் பணி!

இந்தத் தகவல்களை மாணவர்களின் அறிவாற்றலுக்குக் கொண்டு சென்று அவர் களுடைய சிந்தனையைத் தூண்டி, அவர் களுடைய அறிவை மேம்படுத்த வேண் டிய பெரும் பணி உங்களிடம் தான் இருக்கிறது! ஏனென்றால், எந்த அளவுக்கு அறிவார்ந்த தகவல்கள் கொட்டிக்கிடக்கி றதோ, அதற்குக் கொஞ்சமும் குறைவு இல் லாமல் தேவையற்ற குப்பைகளும் இருக் கிறது! அதற்காக நாம் தொழில்நுட்ப வளர்ச்சியைக் குறை சொல்ல முடியாது!

நாம்தான் நம்முடைய குழந்தை களுக்கு நம்முடைய மாணவர்களுக்கு சரி யானதை அடையாளம் காட்டவேண்டும்! எதற்கெடுத்தாலும் டெக்னாலஜியை மட் டுமே நம்பி இருக்கின்ற தலைமுறையாக நம்முடைய மாணவர்கள் மாறிவிடக் கூடாது. எதுவாக இருந்தாலும், கூகுளிடம் கேட்டுக் கொள்ளலாம். ஏ.ஐ.யிடம் கேட்டுக் கொள்ளலாம் என்ற மெத்தனம் வந்து விடக் கூடாது!

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

**ஆசிரியப் பெருமக்களுக்கான நுழைவு நிலைப் பயிற்சி தொடக்க விழா – 277 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 243 புதிய கட்டடங்கள் மற்றும் பாரத சாரண – சாரணியர் தலைமை அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டு விழா – 94 கோடி ரூபாயில், புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டிருக்கக்கூடிய 59 பள்ளிக் கட்டடங்கள் திறப்பு என்று ‘முப்பெரும் விழா’ என்று இந்த நிகழ்ச்சிக்குப் பெயர் சூட்டி ஐம்பெரும் விழாவை ஏற்பாடு செய்திருக்கின்ற பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கும், அவருக்குத் துணை நிற்கக்கூடிய துறையின் செயலாளர் சந்திரமோகன் உள்ளிட்ட அத்தனை அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!**

**எப்போதும் மாணவர்களுக்குத்தான் ஆசிரியர்கள் பாடம் எடுப்பார்கள். ஆனால், வரவேற்புரை மூலமாக ஆசிரியருக்கே பாடம் எடுத்திருக்கிறார் நம்முடைய அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.**



---

### பழந்தமிழ் நாகரிகத்தின் தொன்மையைக் கண்டுணர "பூம்புகார்" கடல் பகுதியில் ஆய்வுப் பணிகள் தொடக்கம்!

# கீழடியைத் தொடர்ந்து பூம்புகாரின் பெருமையையும் வெளிக்கொணர்வோம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

**சென்னை, செப்.21 -**

**“கீழடியைத் தொடர்ந்து பழந் தமிழ் நாகரிகத்தின் தொன் மையை கண்டுணரும் வகையில் பூம்புகாரின் பெருமையையும் வெளிக்கொணர்வோம்!” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று விடுத்த வலை தளப் பதிவில் சூளுரைத்துள்ளார்.**

மூவேந்தர் காலத்திலும், சங்க இலக்கியத்திலும், சங்க காலத்திற்கும் பின்னான காப்பி யங்களிலும் சிறப்பித்து கூறப் படும் மிகப்பெரும் கடல் வாணிபத் துறைமுகமாக இருந் தது காவிரிப்பூம்பட்டினம் என்ற ழைக்கப்பட்ட இன்றைய மயி லாடுதுறை மாவட்டத்தில் உள்ள "பூம்புகார்... "பூம்புகாரில்" பழந்த மிழ் நாகரிகத்தின் தொன்மை யைக் கண்டுணர்ந்து ஆராயும் பொருட்டு, இந்திய கடல்சார் பல் கலைக்கழகத்தின் உதவியுடன் தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில், ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

கடலுக்கு அடியில் ஆய்வுகள் மேற்கொள்ளும் இப்பணி யினை பேராசிரியர் கே.ராஜன் தலைமையில், தொல்லியல் துறை இணை இயக்குநர் சிவானந்தம் உள்ளிட்டோர் அடங்கிய வல்லுநர் குழு தொடங்கியுள்ளது.

இது தொடர்பாக, முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலை தளப்பதிவு வருமாறு:-

**கீழடி நம் தாய்மடி எனச் சொன்னோம்! இரும்பின் தொன்மையை உலகுக்கு உணர்த்தினோம்! என்று குறிப்பிட்டுள்ளார். அடுத்து, "நீரின் வந்த நிமிர்பரிப் புரவி யும், காலின் வந்த கருங்கறி மூடையும்" என நிறைந்து வளம் பெற்ற பூம்புகாரின் பெருமையை வெளிக்கொ ணர்வோம்.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

---

**செம்பரம்பாக்கத்திலிருந்து சென்னை மாநகருக்கு கூடுதலாக - நாளொன்றுக்கு 265 எம்.எல்.டி. குடிநீர் வழங்கும் திட்டம் - முதல்வர் தொடங்கி வைத்த நிகழ்வு...** 2ஆம் பக்கம்